சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.

**முன்னிலை**:- திரு.S. முத்துராமன், B.L.,

2055 திருவள்ளுவராண்டு , ஸ்ரீ குரோதி வருடம், வைகாசி மாதம் 22 ம் நாள்

2024 ம் ஆண்டு ஜூன் மாதம் 4 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைநிலை மனு எண்.02/2022 இன் அசல் வழக்கு எண்.74/2022**

அன்பழகன் .........மனுதாரர்/வாதி

//எதிர்//

1. கஞ்சனா

2. கணேசன் ........... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு 16.04.2024 ம் தேதியன்று வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சிங்காரவேலு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்த பின்னர், இந்நீதிமன்றம் இன்று (04.06.2024) வழங்கும்...........

**உத்தரவு**

பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள காரணங்களை அனுசரித்து ஏற்றுக் கொண்டு இந்நீதிமன்றத்தில் தொழில் புரியும் வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட வேண்டி கட்டளை 26 விதி 9-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம் :-**

வழக்கு சொத்தானது மனுதாரர்/வாதி மனைவி கங்கா தேவி என்பவர் பெயருக்கு கடந்த 2012 ம் ஆண்டு தாவா கிராமமான அதங்குடி கிராமத்தில் வசித்து வந்த முகம்மது அயூப்கான் என்பவரின் மனைவி மும்தாஜ் பேகம் என்பவரிடமிருந்து கிரயம் பெறப்பட்டு கூத்தாநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு எண்.940/2012 என பதிவு செய்யப்பட்ட சொத்து என்றும், சொத்தில் அருகிலேயே தனது மனைவி கங்காதேவி பெயரில் அதங்குடி கிராமம் பட்டா எண்.294-ன் படி உள்ள சொத்தையும் மனுதாரர்/வாதி பெயருக்கு நிர்வாக வசதி கருதி கடந்த 17.03.2022 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் தன் பெயருக்கு எழுதிக் கொடுத்துவிட்டார் இந்த சொத்துதான் வழக்கு சொத்து என்றும்,

மனு சொத்தானது மனுதாரர்/வாதி பெயருக்கு பட்டா மாற்றமாகி தன் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றும், இந்த சொத்திற்கு அருகில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சொத்தும், ஒரு காலனி வீடும் உள்ளது என்றும், மேற்படி சொத்து உள்ள ஊரில் வசிக்காமல் மன்னார்குடி நகரில் தற்காலம் குடியிருந்து வருகிறேன் என்றும், இதை வாய்ப்பாக பயன்படுத்தி கொண்ட எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள், மனுதாரர்/வாதிக்கு சொந்தமான இடத்தில் காலனி வீட்டிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் கழிவறை அசுத்தங்கள் வெளியேற்ற கழிவு நீர் தேக்க தொட்டி (Septic Tank) அமைத்திருந்தார் என்றும், இந்த விபரம் தெரிந்த உடன் மனுதாரர்/வாதி அணுகி ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டபோது அதற்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்கள் இடத்தில் கட்டியுள்ளதாகவும், எதுவும் செய்ய முடியாது என்று மிரட்டினார்கள் என்றும், மனு சொத்தை சர்வேயர் உதவியுடன் அளந்து கண்டு யார் இடத்தில் கழிவுநீர் தேக்க தொட்டி உள்ளதோ அதன்படி செய்து கொள்ள வேண்டியது, தன் இடத்தில் இருந்தால் அகற்றி கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டு அதங்குடி கிராம நிர்வாக அலுவலர் மூலமாக அளவீடு செய்வதற்கு ஏற்பாடு செய்த பொழுது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அளவை பணிக்கு வரமறுத்து விட்டதால் நீதிமன்ற ஆணையர் மூலம் சொத்தை அளவீடு செய்தால் தான் உண்மை நிலவரம் தெரிய வரும் என்பதாலும்,

மனுச் சொத்தில் மனுதாரர்/வாதிக்கு சொந்தமான இடத்தில் கருங்கல் தூண், கம்பிவேலி, அமைக்க முயற்சி செய்தபோது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அடியாட்களுடன் வந்து கருங்கல் தூணை உடைத்தும், கம்பி வேலியை பிரித்து எரிந்தும், கொலை மிரட்டல்விடுத்ததால் சம்பவம் தொடர்பாக கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் கடந்த 24.02.2022 அன்று ஒரு புகார் மனுவை கொடுத்தும், சிவில் பிரச்சனை என்பதால் புகாரினை பெற்றுக் கொள்ளவில்லை என்றும், மனுச்சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்து வேலி அமைத்து பராமரிக்க வேண்டியிருப்பதால் இந்நீதிமன்றத்தில் தொழில்புரியும் வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து மனுச் சொத்தை சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் அளந்து கண்டறிய ஏதுவாக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 1ம், 2ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும்,

உண்மை நிலவரப்படிக்கும் நிலைநிற்க தகுந்ததல்ல என்றும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்த வழக்கின் உண்மை தன்மைகளை ஆவணங்கள் மூலமாகவும், சாட்சிகள் மூலமாகவும் நிரூபிக்க முயற்சி செய்ய வேண்டுமே ஒழிய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து அதனடிப்படையில் ஆவணங்களை சேகரிக்க முயற்சி செய்யக் கூடாது பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகள் உள்ளது என்ற அடிப்படையில் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பு இருப்பதாக சொல்லும்பட்சத்தில் வசப்பரிகாரம் கோர இயலுமே தவிர செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் தாக்கல் செய்து அதில் ஆணையர் நியமனம் என்பது செய்ய இயலாது என்ற சட்டக் கோட்பாட்டின் அடிப்படையிலும் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டியும், மனுதாரர்/வாதிக்கு சொந்தமான இடத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கழிவுநீர் தேக்க தொட்டி அமைத்துள்ளனர் என்று மனுதாரர் தனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் வசப்பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பது ஏற்புடையதல்ல என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களுக்கு சொந்தமான இடத்தில் கழிவுநீர் தொட்டி அமைத்திருப்பதில் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தினை அளக்க மனு கொடுத்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற வகையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. <u>மனுதாரர்/வாதி தரப்பு மனுவில் கேட்கப்பட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதா? என தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது :-</u>

மனுதாரர்/வாதி தரப்பில் மனு சொத்தானது மனுதாரர்/வாதி பெயருக்கு பட்டா மாற்றமாகி தன் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றும், இந்த சொத்திற்கு அருகில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சொத்தும், ஒரு காலணி வீடும் உள்ளது மேற்படி சொத்து உள்ள ஊரில் வசிக்காமல் மன்னார்குடி நகரில் தற்காலம் குடியிருந்து வருவருதை வாய்ப்பாக பயன்படுத்தி கொண்ட எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மனுதாரர்/வாதிக்கு சொந்தமான இடத்தில் காலணி வீட்டிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் கழிவறை அசுத்தங்கள் வெளியேற்ற கழிவு நீர் தேக்க தொட்டி (Septic Tank) அமைத்திருந்த விபரம் தெரிந்த உடன் மனுதாரர்/வாதி அணுகி ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டபோது அதற்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்கள் இடத்தில் கட்டியுள்ளதாகவும், எதுவும் செய்ய முடியாது என்று மிரட்டினார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அடியாட்களுடன்

வந்து கருங்கல் தூணை உடைத்தும், கம்பி வேலியை பிரித்து எரிந்தும், கொலை மிரட்டல்விடுத்ததால் சம்பவம் தொடர்பாக கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் கடந்த 24.02.2022 அன்று ஒரு புகார் மனு கொடுத்தபொழுது சிவில் பிரச்சனை என்பதால் புகாரினை பெற்றுக் கொள்ளவில்லை என்றும், மனுச் சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்து வேலி அமைத்து பராமரிக்க வேண்டியிருப்பதால் இந்நீதிமன்றத்தில் தொழில்புரியும் வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து மனுச் சொத்தை சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் அளந்து கண்டறிய ஏதுவாக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவிட வேண்டுமென்று வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆக்கிரமிப்பு இருப்பதாக சொல்லும்பட்சத்தில் வசப்பரிகாரம் கோர இயலுமே தவிர செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து அதில் ஆணையர் நியமனம் என்பது செய்ய இயலாது என்றும், மனுதாரர்/வாதிக்கு சொந்தமான இடத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கழிவுநீர் தேக்க தொட்டி அமைத்துள்ளனர் என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் வசப்பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பது ஏற்புடையதல்ல என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களுக்கு சொந்தமான இடத்தில் கழிவுநீர் தொட்டி அமைத்திருப்பதால் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தினை அளக்க மனு கொடுக்கப்பட்டுள்ளது என்ற வகையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதிடப்பட்டது.

இருதரப்பு வழக்காவணங்கள் மற்றும் மற்ற ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனுதாரர்/வாதியின் அனுபவத்திலும் , சுவாதீனத்திலும் இருந்து வரும் மனுச் சொத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கழிவுநீர் தேக்க தொட்டி (Septic Tank) அமைத்து ஆக்கிரமித்துள்ளதால் மனுச் சொத்தை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து, மனுச் சொத்தை சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் அளவீடு செய்து வேலி அமைத்து பராமரிக்க உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்/வாதி தரப்பில் 17.03.2022 ம் தேதியிலிருந்து மனுதாரர்/வாதிக்கு அவருடைய மனைவி எழுதி வைத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரத்திலிருந்து மனுச் சொத்தானது மனுதாரர்/வாதியின் அனுபோகத்தில் தொடர்ந்து இருந்து வந்துள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கழிவு நீர் தேக்கத் தொட்டியை அகற்றி மனுச் சொத்தில் வேலி அமைக்க ஆணையர் நியமனம் செய்து, சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் அளந்து கண்டறிந்து அறிக்கை தாக்கல்

செய்யக் கோரியுள்ள சங்கதிகள் மனுவின் நிலை மற்றும் தன்மையை கருத்தில் கொண்டு ஏற்றுக்கொள்ளதக்கதாக உள்ளது. மேலும் மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ளவாறு ஆணையர் நியமனம் செய்து, சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் மனுச் சொத்தை அளந்து கண்டறிந்தால்தான் மனுச் சொத்தின் ஆக்ரமணம் குறித்து இந்நீதிமன்றத்தால் தீர்மானம் செய்ய முடியும் என்பதாலும், மேலும் மனுதாரர்/வாதி குறிப்பிடுவதுபோல இந்த பிரதிவாதிகள் ஏற்படுத்தியிருக்கும் ஆக்கிரமிப்பு பொறுத்து ஆணையருடைய அறிக்கையும், வரைபடமும் இவ்வழக்கு தீர்ப்பு சமயத்தில் அதைப்பெற்று ஒரு முடிவுக்கு வர ஏதுவாக இருக்கும் என்பதால் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே இயற்கை நீதியின்பாற் சிறந்தது என்று இந்நீதிமன்றம் மேற்கண்ட ஆய்வின்படி கருதி தீர்மானிக்கிறது.

**5.** இறுதியில், மனு அனுமதிக்கப்பட்டும், 17.03.2022 ம் ஆண்டு பெற்ற செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் மனுச்சொத்தின் ஆக்ரமணம் குறித்து முழுமையாக தீர்வு செய்ய ஆணையர் நியமனம் செய்து, சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் அறிக்கை தாக்கல் செய்வதற்காக வழக்கறிஞர் **திரு.சத்தியசீலன், B.E., L.L.B.,** அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டும், நீதிமன்ற ஆணையர் ஊதியம் **ரூ.10,000/-** மனுதாரர்/மேல்முறையீட்டாளர் நீதிமன்ற ஆணையரிடம் நேரடியாக செலுத்த வேண்டும் என்றும், இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய **06.07.2024** தேதியன்று ஒத்தி வைக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு வாய்மொழியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024 ம் ஆண்டு ஜூன் திங்கள் 4 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.06.04 17:30:36 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.

**பின் இணைப்பு**

இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை.

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.06.04 17:30:49 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.